# கவிஞர் பசுபதியின் கவிதைகளில் மானுடவிடுதலை நோக்கு

ஈஸ்வரநாதபிள்ளை குமரன்,
சிரேஷ்ட விரிவுரையாளர், தமிழ்த்துறை,
யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்.

**ஆய்வுச்சுருக்கம்**

ஈழத்துத் தமிழ்க் கவிதை உலகிற்கு 1950 இல் அறிமுகமான கவிஞர்களுள் ஒருவர் பசுபதி. இடதுசாரி இயக்கங்களுடன் தன்னை இனங்காட்டி வந்த இவர் சமகாலத்தில் ஈழத்திலிருந்தும் தமிழகத்திலிருந்தும் வெளியான பத்திரிகைகளிலும் சஞ்சிகைகளிலும் கவிதைகளை எழுதியுள்ளார். அவரது இறப்பின் பின்னர் அவை தொகுக்கப்பட்டுப் 'புது உலகம்' என்ற பெயரில் வெளிவந்துள்ளன. பசுபதியின் கவிதைகளில் பெரும்பாலானவை மானுடவிடுதலை சார்ந்தன. பொதுவுடைமைச் சிந்தனைகளின் பின்னணியில் சமூகத்தையும் அதில் உள்ள அசமத்துவத்தையும் விமர்சித்து, ஏற்றத்தாழ்வற்ற சமூகத்தினைக் காண்பதற்கான வழியினை இனங்காட்டுவனவாக அவை உள்ளன. அவரது கவிதைகளைப் பகுப்பாய்வு செய்வதன் மூலம் அவற்றின் ஊடாக அறியப்படும் மானுட விடுதலை பற்றிய கருத்துக்களையும் அவற்றின் கனதியினையும் வெளிப்படுத்துவதே இந்த ஆய்வின் பிரதான நோக்கமாகும். மேலும் மானுட விடுதலை பற்றிக் கவிதைகளை எழுதிய ஆரம்பகாலக் கவிஞர் என்ற வகையில் அவரது கவிதைகள் பிற்காலங்களில் இந்த் விடயத்தினைக் கவிதைகளில் கையாண்டவர்களுக்கு எவ்வாறு முன்மாதிரியாக அமைந்தன என்பதை அறிந்து கொள்ள முனைவது இவ்வாய்வின் துணை நோக்காக அமைகின்றது. இந்த ஆய்வு விவரண ஆய்வு முறையியலின் அடிப்படையில் மேற்கொள்ளப்படுகின்றது. பகுப்பாய்வு, ஒப்பீட்டு அணுகுமுறைகள் முறையே அவரது படைப்பினை நுனித்து நோக்குவதற்கும் மதிப்பிடுவதற்கும் பயன்படுத்தப்பட்டுள்ளன. இந்த ஆய்விற்கான முதனிலை ஆதாரமாகப் புது உலகம் கவிதைத் தொகுதியில் உள்ள கவிதைகள் பயன்படுத்தப்படுவதோடு, துணை ஆதாரங்களாகப் புதுஉலகம் தொகுதிக்கு எழுதப்பட்ட விமர்சனங்கள், இரசனைக் குறிப்புக்கள் என்பனவும் கவிஞர் பசுபதி பற்றிய கட்டுரைகளும் எடுத்தாளப்படுகின்றன. இந்த ஆய்வின் மூலம் கவிஞர் பசுபதி தனது கவிதைகளில் வெளிப்படுத்தியுள்ள மானுட விடுதலை பற்றிய கருத்துக்கள், அவற்றின் கனதி, முன்மாதிரி என்பனவற்றை விளங்கிக் கொள்ள முடிவதோடு இத்தகைய கருத்துக்களை வெளிப்படுத்தும் போது அவர் கலைத்துவத்தினைப் பேணிக்கொண்ட முறையினையும் அறிந்து கொள்ள முடியும்.

**திறவுச்சொற்கள்:** பசுபதி, மானுடவிடுதலை, முற்போக்கு, பொதுவுடைமை

**அறிமுகம்**

உலகில் தோன்றிய உயிரினங்களுள் சிந்தனைத் திறனாலும் செயற்றிறனாலும் உயர்ந்தவர்கள் மனிதர்கள். இதனால்தான் அரசியல், சமூக, பொருளாதார வளர்ச்சிகளையும் அறிவியல், பண்பாட்டு முன்னேற்றங்களையும் அவர்களால் துரிதமாக எட்ட முடிந்தது. ஏனைய உயிரினங்களை விட நாகரிகவளர்ச்சியில் முன்னேற்றங் கொண்டவர்களாக அவர்கள் வளர்ந்துள்ளனர். ஆனால் மனிதர்க ளிடையே நிலவிய மேலாதிக்கப்போக்கு சுயநலம், சர்வாதிகாரம் முதலானவை மறுபுறத்தில் அவர்களிடையே வேறுபாடுகளையும் முரண்பாடுகளையும் தோற்று வித்தன. பொருளாதார அசமத்து வளர்ச்சி இதனை மேலும் கூர்மையாக்கியது. காலப்போக்கில் ஒருவர் மற்றவரை அடக்கியாளும் மனப்பாங்கு அவர்களிடையே உருவாகிற்று. இதனால் மக்கள் இன, சமூக, குழு, வர்க்க, சாதிய நிலைகளில் பாகுபடுத்தப்பட்டு அடக்குமுறைகளுக்கு உள்ளாக்கப்பட்டனர்.

அடக்குமுறைகளுக்கு உள்ளானோர் சாதாரண மனிதர்க்கிருக்க வேண்டிய வாழ்வியல் உரிமைகளை இழந்து துன்பத்திற்குள்ளாகினர். சுரண்டல், வறுமை, துயரம், உளநெருக்கீடு என்பவற்றால் வாடினர். காலப்போக்கில் அடக்கு முறைக்குள்ளாகிய மனிதர்களிடையே மானுட விடுதலை பற்றிய சிந்தனை தலை தூக்கத் தொடங்கியது. உலகளாவிய ரீதியில் மானுட விடுதலையினை வலியுறுத்திப் போராட்டங்களும், பிரசாரங்களும், எழுச்சிகளும் ஏற்பட்டன. அவை வெவ்வேறு தளங்களில் வேறுவேறு தத்துவப் பின்னணிகளில் வளர்த்தெடுக்கப்பட்டன. இந்த அலை சுதந்திரத்தை அடுத்து வந்த தசாப்தங்களில் ஈழத்தையும் பாதித்தது (இளங்கீரன், சுபைர், 1984:4-6). இந்த மானுட விடுதலை பற்றிய எழுச்சி அலையின் பாதிப்பிற்குள்ளான கவிஞர்களுள் ஒருவரே கவிஞர் பசுபதி.

இவர் ஆயிரத்துத் தொளாயிரத்து ஐம்பதுகளில் ஈழத்துத் தமிழ்க் கவிதை உலகிற்கு அறிமுகமாகினார். 'யாழ்ப்பாணத்துக் கவிராயர்' 'கவிஞர் பசுபதி' என்ற பெயர்களால் பலராலும் நன்கு அறியப்பட்டவர். வராத்துப்பளை பருத்தித்துறை யினைப் பிறப்பிடமாகக் கொண்ட இவர் தமிழறிஞர் கந்தமுருகேசனாரிடம் தமிழ் இலக்கியங்களையும் இலக்கணங்களையும் கற்றுத் தேர்ந்தார். நல்லூர் ஆசிரிய பயிற்சிக் கலாசாலையில் ஆசிரியர் பயிற்சி பெற்று இரத்மலானையிலும் பின்னர் கைதடியிலும் உள்ள செவிப்புலன் கட்புலனற்றோர்க்கான கல்விநிலையங்களில் பணியாற்றினார். 1965 இல் தனது நாற்பதாவது வயதில் இவர் காலமானார். எனினும், தனது குறுகிய வாழ்நாட்களில் இவர் தமிழ்நாட்டிலிருந்தும் இலங்கையிலிருந்தும் வெளிவந்த பத்திரிகைகளில் பல கவிதைகளை எழுதியுள்ளார். அவற்றுள் நாற்பத்திரண்டு கவிதைகள் அவரின் இறப்பின் பின்னர் தொகுக்கப்பட்டு 'புது உலகம்' என்னும் தொகுப்பாக எழுத்தாளர் கூட்டுறவுப் பதிப்பகத்தினால் வெளியிடப்பட்டன.

**காலமும் சூழலும்**

பசுபதி தீவிரமாகக் கவிதைகளை எழுதிய ஐம்பதுகள், அறுபதுகள் காலகட்டம் ஈழத்துத் தமிழ்க் கவிதை வரலாற்றில் குறிப்பிட்டுச் சொல்லத்தக்கதொரு கால கட்டமாகும். சுதந்திரத்துக்குப் பின்னதாக ஈழத்தின் அரசியல், பொருளாதார, சமூக நிலைகளில் ஏற்பட்ட மாற்றங்களும், முற்போக்குச் சிந்தனைகளும், சமூக விழிப்புணர்வும், தேசிய பிரக்ஞையும் கவிஞர்களின் நோக்குநிலையில் கனதியான பாதிப்பினை ஏற்படுத்தின (சிவத்தம்பி, கா, *2010:163 -165*). இப்பாதிப்பு ஈழத்துத் தமிழ்க் கவிதை உள்ளடக்க ரீதியாகப் புதிய தளங்களில் நகர்வதற்கு வாய்ப்பினை உருவாக்கிற்று. இக்காலகட்டத்தில் நான்கு முக்கியமான கவிதைப் போக்குகளை அவதானிக்க முடிந்தது (மௌனகுரு, சி., சித்திரலேகா, மௌ,, நுஃமான், எம், ஏ, *1979, 21 -25*).

i. முற்போக்குச் சிந்தனைகளின் பாதிப்பிற்குள்ளான கவிஞர்கள் சிலர் நேரடியாகவே அரசியல் இயக்கங்களுடன் தம்மை இனங்காட்டிக் கொண்டு தாம் சார்ந்திருந்த அரசியல் இயக்கங்களின் தளங்களில் பிரசாரப் பாங்கான அரசியல் கவிதைகளை எழுதிவந்தனர்.

ii. முற்போக்குச் சிந்தைனைகளால் பாதிக்கபட்ட கவிஞர்களுள் மற்றொரு சாரார் அன்றாட வாழ்க்கை அனுபவங்களைச் சித்திரிப்பதன் ஊடாகக் கலாபூர்வமான அரசியல் உணர்வை வெளிப்படுத்த முயன்றனர்

iii. நேரடியாகவோ அல்லது மறைமுகமாகவோ அரசியல் உணர்வை வெளிக்காட்டாத போதும் ஏதோ ஒரு வகையில் முற்போக்கு அரசியல் சித்தாந்தங்களுடன் உறவுடையவர்களாக இன்னொருசாரார் விளங்கினர்.

iv. முற்போக்குச் சித்தாந்தங்களுடன் தம்மை இனங்காட்டிக் கொள்ளாத சீர்திருத்தவாதப் போக்குடைய அல்லது ஆன்மீக நோக்குடைய கவிஞர்களும் இக்காலத்தில் எழுதிவந்தனர்.

இவர்களுள் முதலாவது வகைக் கவிஞர்களுள் ஒருவராகவே பசுபதி கொள்ளத்தக்கவர். சுபத்திரன், புதுவை இரத்தினதுரை போன்றோரும் இவ்வகைக் கவிஞர்களே. முற்போக்குக் கொள்கைகளை ஏற்று அவற்றைத் தமது கவிதைகளில் இவர்கள் தீவிரமாக வெளிப்படுத்தி வந்தனர். முற்போக்கு தமிழில் சமுதாய நோக்கை வளர்த்த அதேவேளை தமிழைச் சர்வதேச இலக்கிய இயக்கத்துடன் இணைத்து, உலகப் பொதுவான இலக்கியச் செல்நெறிகளைத் தமிழிற் பிரதிபலிக்கவும் தமிழைப் பிறமொழி இலக்கியங்களில் கொண்டு செல்லவும் உதவிற்று (சிவத்தம்பி, கா, *1978:44*).

பசுபதி சமூக விடுதலைப் போராட்டங்களுடனும் போராட்ட இயக்கங் களுடனும் தன்னை நேரடியாக இணைத்துக்கொண்டவர். இளவயது முதலாகவே சமூகக் கொடுமைகளுக்கு உள்ளாகி வந்த இவரிடம் அவற்றை எதிர்க்கும் உள்ளுரமும்

சமூகசேவையில் நாட்டமும் இயல்பாகவே வளர்ந்திருந்தன. 1956 முதல் இலங்கைக் கம்யூனிஸ்ட் கட்சியின் அங்கத்தவராக இணைந்து செயற்பட்டு வந்த இவர் இறக்கும் வரை அக்கட்சியின் கொள்கைகளையும் செயற்றிட்டங்களையும் முன்னெடுக்கும் ஒரு தீவிர செயற்பாட்டாளராக விளங்கி வந்தார். யாழ்ப்பாணத்திலும் பருத்தித் துறையிலும் இருந்த சன்மார்க்க ஐக்கிய வாலிபர் சங்கம், நல்வழி ஐக்கிய வாலிபர் சங்கம் என்பவற்றுடனும் இணைந்து செயற்பட்டு வந்தார். யாழ்ப்பாணம் தி.மு.க வின் ஸ்தாபக அங்கத்தவர்களில் ஒருவராகவும் விளங்கினார். 1956 இல் இருந்து 1963 வரை அகில இலங்கைச் சிறுபான்மைத் தமிழர் மகாசபையின் இணைச் செயலாளராகவும் நிர்வாகச் செயலாளராகவும் பணியாற்றி வந்த இவர் தேநீர்க்கடைப் பிரவேசம், மனித உரிமைப் போராட்டம் என்பவற்றில் தன்னை இணைத்துக்கொண்டார். ஒடுக்கப் பட்டோர், உழைப்பாளிகள், சாதியக் கொடுமைகளுக்கு ஆளானோர் என்பவர்களுக் காக அவரது குரல் ஓங்கி ஒலித்தது. அவரது ஆளுமை உருவாக்கத்தின் பின்னணியில் இத்தகைய ஸ்தாபனத் தொடர்புகளும் போராட்டங்களும் முக்கிய இடம் பெறுகின்றன.

தொடக்கத்திலிருந்தே கட்சிகளுடனும் இயக்கங்களுடனும் தன்னை இணைத்துக்கொண்ட பசுபதியை வெறுமனே ஒரு கவிஞராக மட்டும் கூறமுடியாது. கொள்கைப் பற்றுடனும் விடாமுயற்சியுடனும் இயங்கி வந்த ஒரு போராளிக் கவிஞராக அடையாளம் காணும் போதுதான் அவரது கவிதையின் போக்கினையும் தார்ப்பரியத்தினையும் புரிந்துகொள்ள முடியும்.

> "கவிஞர் பசுபதி ஒரு புரட்சிக்கவி, புத்துலகம் காண விழைந்த புதுமைக்கவி. ஏழைகளுக்காகக் குரலெழுப்ப விழைந்த புதுமைக்கவி பஞ்சமருக்காக வெஞ்சமர் தொடுத்த சொற்கவி... அவர் பேச்சாலும் எழுத்தாலும் தனது கடைசி மூச்சுவரை பாட்டாளி வர்க்கப் புரட்சிக்குப் பாடுபட்டதோர் கர்மவீரன். அவர் தனது இலட்சியத்திற்குப் பங்காற்றும் ஒருவழியாகவே கவிதையைப் பயன்படுத்தினார்."

எனப் பாரதிநேசன் சின்னத்தம்பி பசுபதியின் புதுஉலகம் கவிதைத்தொகுதிக்கு வழங்கிய விமர்சன உரையில் குறிப்பிடுவது கவனிக்கத்தக்கதாகும் (தினக்குரல், 07.01.2001).

சரியான கொள்கை வழிநிற்றல், அக்கொள்கையில் ஈடாற்றமற்ற உறுதி, தனது இலட்சியத்தின் எதிர்கால வெற்றியில் எள்ளளைத்தும் சந்தேகமற்ற இருப்பு, நம்பிக்கை என்பன பசுபதியின் கவிதைகளின் தளமாக அமைந்தன. வர்க்க பேதத்தினால் ஏற்றத்தாழ்வுற்று தாறுமாறாகக் கிடக்கும் சமூக அமைப்பினை நீக்கி ஏற்றத்தாழ்வற்ற ஒரு சுபீட்சமான சமூக அமைப்பை தோற்றுவிக்க வேண்டும் என்ற இலட்சிய வேட்கையினால் உந்தப்பட்டு அவர் கவிதைகளை எழுதினார். கவிதையினூடாகப் புது உலகம் காணத்துடித்தவர் அவர். தனது புலமையை மானுட சமூகத்தின் விடுதலைக்காக அர்ப்பணித்தவர்.

**கவிதைக்கொள்கை**

கலையோ அல்லது இலக்கியமோ மக்களை இயக்கிச் செயலுக்குத் தூண்ட வேண்டும் என்ற எண்ணத்தினைக் கொண்டவர் பசுபதி. அவரது கவிதைகள் அழகியலை முதன்மைப்படுத்தி நின்றவையாகவோ கேளிக்கைக்குரியவையாகவோ அமைந்தவையல்ல. அவை கருத்துச் செறிவும் மானுட விடுதலை என்ற குறிக்கோளும் கொண்டவையாக விளங்கின. தனது 'நாடும் ஏடும்' என்னும் கவிதையில் தனது கவிதைக் கொள்கையினை அவர் பின்வருமாறு தெளிவுறுத்துகின்றார்.

*"இலக்கியத்தைப் பொழுது போக்காகக் கொள்வோர்*
*இருக்கின்றனர் இந்நாட்டில் என்று சொன்னால்*
*இலக்கியத்தை வீட்டில்வைத் தேபூசிக்கும்*
*வீணர்களும் வாழ்கின்றனர் விடிவு காட்டும்*
*காலைக்கதிரைக் கண்மூடி மறைத்தல் போலாம்*
*கசடர்சிலர் குழறுதலைக் கேட்க நாணும்*
*விலைக்கு வரும் இவர் கருத்து வேண்ட என்றால்*
*வேசியரும் விழைவாரோ விருத்தங் கண்டு."* (புதுஉலகம், நாடும்ஏடும்: 27 -28)

இதனால் பசுபதியின் கவிதைகளில் அதிகம் வெளிப்பட்டு நிற்பவை மானுட விடுதலைக்கு ஆதரவான கருத்துக்களே. பாட்டாளிகளின் துயரம் கலைந்து சாதிக்கொடுமை ஒழிந்து ஏற்றத்தாழ்வற்ற புது உலகம் பிறக்க வேண்டும் என அவர் விரும்பினார். அதற்கு மார்க்சியத் தத்துவம் ஒன்றே வழிகாட்டும் என்னும் கருத்தில் அசையா நம்பிக்கை கொண்டவராகக் காணப்படுகின்றார். இலக்கியத்தின் பயன் அது மானுட விடுதலைக்கான பாதையினைக் காட்டுவதாகவும், அப்பாதையின் வழியில் செல்வோருக்கு உற்சாகமூட்டுவதாகவும், வழிகாட்டல்களைத் தருவதாகவும் இருக்க வேண்டும் என அவர் கருதுகின்றார். குறிப்பாகச் சொல்வதானால் சிறந்த கவிதை என்பது ஒடுக்கப்பட்டோர், உழைக்கும் மக்கள், விடுதலையை வேண்டுவோர் என்போரின் நோக்கங்களோடு இணைந்து பயணிப்பதாக இருக்க வேண்டும் என்கிறார். இதனைப் பின்வரும் கவிதையில் தெளிவாக அவர் வெளிப்படுத்தியுள் ளதைக் காணலாம்.

*தொழிலாளர் திண்தோளில், திரண்ட மார்பில்,*
*திருவுலகிற் கொளியூட்டும் ஆலை தன்னில்,*
*உழவோடு உறவாடும் உழவர் கூட்டம்*
*ஊற்றான விளைவுகளின் கழனி தோறும்,*
*எளிதான இல்வாழ்வை இயங்கச் செய்யும்*
*இசைவான மனைமக்கள் களிப்பின் ஊடும்*

விழைவோடு வியனுலகம் உய்ய வேண்டி
விரைகின்றார் அவரோடு இசைந்தாள் கன்னி
(புதுஉலகம், கவிதைக்கன்னி: 21)

**மானுட விடுதலைக் கருத்துக்கள்**

மானுட விடுதலை நோக்கிய பசுபதியின் கவிதைகள் முற்போக்கான கருத்துநிலைகளை வெளிப்படுத்துகின்றன. உழைப்பாளர் வாழ்க்கை, உழைப்புச் சுரண்டல், வர்க்க ஒடுக்குமுறை, சாதிய ஒடுக்குமுறை, பொதுவுடைமையின் தேவை, புரட்சி, தேசிய உணர்ச்சி, புதுஉலகு பற்றிய எதிர்பார்ப்பு, மொழி வளர்ச்சி, பண்பாட்டு முன்னேற்றம் முதலானவை சார்ந்து அவர் கவிதைகளைப் படைத்துள்ளார்.

**உழைப்பாளர்**

உலகில் எண்ணிக்கையால் அதிகமானவர்கள் உழைப்பாளர்கள். உடலாலும், அறிவாலும் அவர்கள் பாடுபட்டு உழைக்கின்றார்கள். மனித தேவைகளை நிறைவு செய்கின்றார்கள். வாழ்க்கைக்கு அவசியமான பொருள்களையும் சேவைகளையும் குறைவின்றி வழங்குகின்றார்கள். வயலிலும் தொழிற்சாலைகளிலும் அலுவலகங்களிலும் அவர்கள்படும் கஷ்டங்களே நிம்மதியான மனித வாழ்க்கையின் அத்திவாரங்களாக அமைகின்றன. இந்த உலகம் உழைப்பாளர்களுக்குச் சொந்த மானது. அவர்களது உழைப்பினை நம்பியிருப்பது. இதனால் அவர்கள் மதிக்கப்படுதல் வேண்டும் என்பதை பசுபதி தனது கவிதைகளில் குறிப்பிடுகின்றார்.

பாட்டாளி வர்க்கமொன்று உழைப்ப தாலே
பாருண்டு பலனுண்டு பாரீர் இங்கே!
கூட்டாளி அவர்நமக்குக் குறையாச் செல்வம்
குவலயத்தில் அவர்பெருமை குன்று போலாம்
நாட்டிற்கு முதுகெலும்பு போல்வா ரென்றும்
நல்லதொரு வாழ்வமைத்தால் மக்கட்கு ......
(புது உலகம், பாட்டாளி துயரம்: 41)

இதனால் உழைப்பாளர்கள் தமது உழைப்புக்கேற்ற ஊதியத்தினைப் பெறல் வேண்டும் உரிமைகளும் மதிப்பும் பெற்றிருக்க வேண்டும் என்கிறார். மேலும் அவர்களாலேயே சமூகமும் தேசமும் உலகமும் முன்னேற முடியும் கலையும், மொழியும், பண்பாடும் வளரும் நன்மைகள் பிறக்கும் என்பதை

"உயர்வில்லை தாழ்வில்லை உழுதுண்டு வாழ்வர்!
உற்றபெரு நற்கலைகள் உயர்ந்தோங்கி வாழும்
.......................................
நுண்கலைகள் பெருகுதற்கு வழிபலவே உண்டு

*தாய்தன்மை தம்மொழியை தன்னாட்டை மேவி*
*தலையாயத் தாம்காப்பர் தாழ்வகன்ற வையம்!*
*(புது உலகம், புதுஉலகம்: 23 - 24)*

எனும் கவிதை வரிகளில் எடுத்துக்காட்டுகின்றார்.

**உழைப்புச் சுரண்டல்**

உழைப்பாளர்கள் மனிதவாழ்க்கையின் அச்சாணியாக விளங்கினாலும் நடைமுறையில் அவர்கள் தமக்குரிய உரிமைகளையும் கௌரவத்தினையும் பெறத் தவறி விடுகின்றார்கள் என்கிறார் பசுபதி. சமூகத்தில் குறைந்த எண்ணிக்கையில் வாழ்கின்ற முதலாளிகளினால் அவர்களது உழைப்புச் சுரண்டப்படுகின்றது. உழைப்புக்கேற்ற ஊதியம் அவர்களுக்கு வழங்கப்படுவதில்லை; ஓய்வு போதுமான அளவு கிடைப்பதில்லை; சலுகைகள் தரப்படுவதில்லை அதிக நேரம் அவர்கள் வேலை செய்யப் பணிக்கப்படுகின்றார்கள். இத்தகைய உழைப்புச் சுரண்டல் நேரடியாகவோ அல்லது மறைமுகமாகவோ நிகழ்கின்றது. இங்ஙனம் தொளிலாளர்களின் உழைப்பினைச் சுரண்டிப் பெறும் இலாபத்தில் தான் முதலாளிகளின் சுகபோக வாழ்க்கை நடைபெறுகின்றது.

*“முரண்பட்ட கொள்கைதனை முற்றும் பேணி*
*முயற்சிகள் உடையாரை முடித்துக் கட்டிச்*
*சுரக்கினற் பொருளெல்லாம் சுரண்டி முற்றாய்*
*சுற்றத்தார் தெரியாமல் சோரம் செய்து*
*அரண்கொண்ட தேசத்திற் கழிவு தேடி*
*ஆக்கமோ தனதாக்கம் பேணி நிற்பார்”* (புது உலகம், நாடும் ஏடும்: 28)

என முதலாளிகளின் தந்திரமான சுரண்டலை எடுத்துக்காட்டுகின்றார் பசுபதி. முதலாளிகளுக்கு உழைத்துக்கொடுக்கும் தொழிலாளர்கள் இதனால் எந்த நன்மையும் பெறுவதில்லை. வாழ்க்கையில் முன்னேற்றத்தினையும் அடைவதில்லை. மாறாக, அவர்கள் வறுமையால் வாட்டமுறுகின்றார். நாளாந்த வாழ்க்கை அவர்களுக்குச் சவால் நிறைந்ததாக அமைகின்றது. துயரம் அவர்கள் வாழ்க்கையின் அடையாளமாக விளங்குவதாகப் பசுபதி குறிப்பிடுகின்றார்.

*“காலையிலே எழுந்து சென்று காடு வெட்டி*
*கழனியிலே விளைவுதர உழைத்த பேர்கள்*
*சாலையிலே சந்தையிலே சாக்க டையில்*
*சலியாது உழைத்துழைத் தலுத்த பேர்கள்*
*மாலையிலே மனைநோக்கி மக்கள் நோக்கி*
*மாற்றின்பம் சிலவேனும் அடைய வந்தால்*

வேலையிலே அலையுறுத்தும் கப்பல் போல
வேகுமே அவர் துயரம் சொல்லப் போமோ"
(புதுஉலகம், பாட்டாளி துயரம்: 42)

இதனால் தொழிலாளர்கள் தமது தேவைகளை நிறைவேற்றிக் கொள்ளுதற்குப் பிறரிடம் கையேந்த வேண்டிய நிலை ஏற்படுகின்றது. இது சமூகத்தில் ஈவார், இரப்பார் என இரு பிரிவினரைத் தோற்றுவிக்கின்றது. ஈவார் சமூகத்தில் அதிகாரம் மிக்கவர்களாக உருவாகின்றனர். அவர்கள் சொல்வதைக் கேட்டு உடல்குறுகி, கௌரவத்தை இழந்து, கைகட்டி வாழ வேண்டிய நிலை தொழிலாளர்களுக்கு ஏற்படுகின்றது. இதைக் கண்டு பசுபதி சீற்றங் கொள்கின்றார். உலகிற்கு உணவளித்தும் தேவைகளைப் பூர்த்தி செய்தும் வாழும் தொழிலாளர்களுக்கு இரந்துண்ணும் இழிநிலை ஒருகாலமும் வரக் கூடாது என்கிறார். அவர்கள் தலை நிமிர்ந்து வாழ வேண்டும் என்கிறார்.

"உழைத்தவர் பலபேர் வாட
உறிஞ்சிடும் உந்திப் பேய்கள்
விழைத்தஇக் கொடுமைக் கெல்லாம்
விடிவுறு காலம் எங்கே?
பிழைத்தவர் பிழைத்துக் கொண்டார்
பெரும்பணக் கார ரானார்
இளைத்தவர் இளைத்தா விட்டார்
இதற்கொடு முடிவு காண்போம் (புதுஉலகம், முடிவுகாண்போம்: 47)

**வர்க்கவேறுபாடு**

உழைப்பாளர்கள் அடையும் துன்பத்திற்கும் சமூகத்தில் காணப்படும் அசமத்துவத்திற்கும் காரணம் வர்க்க வேறுபாடே என்கிறார் பசுபதி. சமூகத்தில் உள்ள இக் குறைபாட்டினை அவர் பொதுவுடைமைச் சித்தாந்தப் பின்னணியில் விளங்கிக் கொண்டு, அதனைத் தனது கவிதைகளின் ஊடாக வெளிப்படுத்த முயல்கின்றார். முதலாளித்துவத்தின் எழுச்சி தனியுடைமையின் வளர்ச்சி என்பன சமூகத்தில் உழைக்கும் மக்களை எந்தளவிற்குப் பாதிக்கின்றது என்பதனை அவர் சுட்டிக் காட்டுகின்றார். தங்களின் ஆடம்பர வாழ்க்கைக்காக இருக்கின்ற சமூக அமைப்பை மாற்றமின்றிப் பேண முயல்கின்ற முதலாளித்துவ சக்திகள் மீதான கோபத்தினைப் பல கவிதைகளில் அவர் வெளிப்படுத்தியிருப்பதனைக் காணலாம். அனல் தெறிக்கும் வார்த்தைகளில் அவரது கோபம் கவிதைகளில் பதிவாகின்றது.

**பொதுவுடைமையை ஆதரித்தல்**

வர்க்கவேறுபாடுகள் அற்ற சமூகத்தின் எழுச்சி ஒன்றே மானுடவிடுதலைக்கான வழி என்பதில் அசைக்க முடியாத நம்பிக்கை கொண்டவராகப் பசுபதி விளங்கினார். வர்க்க வேறுபாடுகள் அற்ற சமூகத்தினை உருவாக்குவதற்குப் பொதுவுடைமைக் கொள்கைகள் வழிவகுக்கும் எனக் கருதினார். இதனால் தனது கவிதைகளில் பொதுவுடைமைக் கருத்துக்களை அவர் ஆதரித்துப் பேசுவதைக் காணலாம். பசுபதி கவிதைகளை எழுதிக் கொண்டிருந்த காலங்களில் பொதுவுடைமைக் கருத்துக்கள் ஈழத்தவர்களிடையே பிரபலமாகிக் கொண்டிருந்தன. அவற்றின் தாக்கம் இலக்கியங் களிலும் வெளிப்படத் தொடங்கியிருந்தது. பொதுவுடைமை இயக்கங்கள், இலங்கை முற்போக்கு எழுத்தாளர் சங்கம் முதலானவை பொதுவுடைமைக் கருத்துக்களை மக்கள் மயப்படுத்துவதிலும் செயல்வடிவம் கொடுப்பதிலும் ஆர்வத்துடன் செயற்பட்டு வந்தன. பொதுவுடைமை இயக்கங்களோடு தன்னை இனங்காட்டிக் கொண்டவர் என்ற வகையில் பசுபதியின் கவிதைகளில் இவ்வகையான கருத்துக்கள் கனதியாக வெளிப்பட்டதில் வியப்பில்லை.

*“மண்ணில் விளைந்த புதுமை - உலக*
*மக்கள் எவர்க்கும் பொதுமை!*
*எண்ணி முடிக்க மறுப்போர் - இங்கு*
*இருக்க முற்றும் வெறுப்போம்!*

*சோஷலிசப் பாதை செல்லுவோம்! - வெறும்*
*சோதாக் கருத்தினைத் தள்ளுவோம்!*
*தாசர் களாக வாழ்ந்திடோம்! தகு*
*நேசர்களாக வாழுவோம்!* (புதுஉலகம், தொழிலாளர் சபதம்: 44)

**புரட்சி**

ஏற்றத்தாழ்வுகள் அற்ற சமூகத்தின் உருவாக்கத்திற்கும் மானுட விடுதலைக்கும் சோஷலிசப் புரட்சியே சரியான தீர்வு எனக் கருதும் பசுபதி செங்கொடியின் கீழ் அணிதிரண்டு தொழிலாளரும் ஒடுக்கப்பட்டோரும் செய்யும் புரட்சியால் தான் இந்தச் சமூக அமைப்பை மாற்றியமைக்க முடியும் எனக் கருதுகின்றார். சமூக அமைப்பு மாற்றத்தாலேயே ஒடுக்கப்பட்டோர், தொழிலாளர் என்போர் வாழ்வில் விடிவுண்டாகும் இல்லையேல் அவர்கள் வாழ்வு இன்றேபோல் என்றும் இருக்கும் என அவர் சுட்டிக்காட்டினார். புரட்சியினால் வையத்தையே பணியவைக்க முடியும் என்ற நம்பிக்கையை அவரது கவிதைகள் எடுத்துக்காட்டுகின்றன. இதனால் புரட்சிக் கீதம் இசைக்க வாருங்கள் புரட்சிக்காகச் சபதமிடுங்கள் எனப் பிரசாரக் கோஷங்களை வர்ஷிப்பதாய் அவரது குறிப்பிடத்தக்க எண்ணிக்கையான கவிதைகள் அமைவதைக் காணலாம்.

*புதுவுலகம் காண்பதற்குப் புரட்சி வேண்டும்*
*புதுமைதனை அப்போதே பேண லாகும்*
*இதுஉலகம் எமக்களித்த பாடம் என்றால்*
*ஏற்றதொடு இலட்சியத்தை நழுவ விட்டு*
*அதுபுரட்சி இப்போது நமக்கு வேண்டாம்*
*அதற்கான காரணங்கள் அமையா தென்பர்*
*புதுவுலகம் காண்பவரின் பேச்சுத் தானோ?*
*புரட்சியே நீ வாழ்க! வணக்கம் செய்தேன்."* (புதுவுலகம், புரட்சி வாழ்க: 39)

என்கிறார். மற்றோர் கவிதையில் இடதுசாரி அமைப்பின் செங்கொடியின் கீழ் அணிதிரண்டு வருமாறு மானுட விடுதலை அவாவி நிற்கும் மக்களை அவர் அழைப்பதைக் காணலாம்.

*செங்குருதி வெள்ளம் ஜெகத்திடையே - நீள்*
*செக்கர் வானத் தொளியுடனே*
*சங்கம மாகி விட்டதடா - நம்*
*செங்கொடி வானில் பறக்குதடா*
*புரட்சிக் கீதம் கேட்குதடா - எங்கும்*
*பொங்கி எழுந்த படைகளிடை*
*எழுச்சி கொண்ட வீராநீ - இனி*
*எழுந்து முன்னே புறப்படடா"* (புதுஉலகம், புரட்சிக் கீதம்: 38)

எனும் கவிதை வரிகளை உதாரணமாகக் குறிப்பிடலாம்.

**சமத்துவமான வையகம்**

சமூகப் புரட்சி மூலம் வென்றெடுக்கும் சமத்துவமான உலகம் பற்றிய தனது எதிர்ப்பார்ப்புகளையும் ஏக்கங்களையும் கூடத் தனது கவிதைகளில் பசுபதி வெளிப் படுத்தியுள்ளார். வறுமை நீங்கி, ஏற்றத்தாழ்வுகள் ஒழிந்து, எல்லோரும் எல்லாம் பெற்று, இரப்பாரும் கொடுப்பாரும் இன்றி, எல்லாவகையான இன்பங்களும் சூழ்ந்த சமத்துவமான உலகம் பற்றிய கனவினை அவர் கவிதைகள் பல சுமந்துள்ளன. மனிதன் உலகில் சகல உரிமைகளுடனும் வாழப்பிறந்தவன் வாழ வேண்டியவன். உரிமைகளும், சலுகைகளும், வாழ்வியல் சுகங்களும் மரியாதை, கௌரவம் போன்றனவும் அனைவருக்கும் கிடைக்க வேண்டும். தனியுடைமையாக அவை அமைவது தகாது என்பதை அவர் கவிதைகளில் மீள மீள வலியுறுத்துவதைக் காணலாம். சமத்துவமான உலகில் கிடைக்கும் அமைதி, நிம்மதி, சந்தோஷம், திருப்தி என்பனவற்றை எண்ணி அவர் குதூகலிப்பதைப் பின்வரும் பாடல்வரிகளில் அவதானிக்கலாம்.

*எல்லார்க்கு எல்லாமென் றிருக்கின்ற தங்கே*
*இன்பபுரி இந்நாடு பொன்னாடு ஆச்சே!*
*உல்லாச வாழ்வுண்டு உலுத்தர்சுகம் இல்லை*
*உலகமது புதுவுலகு உயிரத்துடிப்புக் காணீர்!*
*கல்லாதார் என்றொருவர் காணவில்லை கருத்து*
*கலைநுணுக்கம் கண்டவரே காண்பார்கள் பெருத்து*
*தில்லிக்கும் போவதனால் திருப்தியெதும் காணார்*
*திசையெங்கும் புவியெங்கும் திருப்திமிகக் காணும்*
*(புதுஉலகம், புதுஉலகம்: 26) )*

**சாதிக்கொடுமை**

பசுபதி கவிதைகளை எழுதிய காலப்பகுதியில் சாதிய அடக்குமுறை மிக மோசமானதாகக் காணப்பட்டது. உயர்சாதியினர் எனத் தம்மைக் கூறிக்கொள்வோர் பிற சமூகத்தவரைத் 'தாழ்ந்த சாதியினர்' என அடையாளப்படுத்தியதோடு அவர்கள் மீது பல்வேறு அடக்கு முறைகளைக் கட்டவிழ்த்து விட்டிருந்தனர். தாழ்ந்த சாதியினர் எனப்பட்டோரின் நடை, உடை, பாவனைகள், தொழில், சமூக உரிமைகள் முதலானவற்றைத் தீர்மானிக்கும் சக்திகளாக அவர்கள் விளங்கினர். இதனால் தாழ்த்தப்பட்டவர்கள் பல்வேறு சமூகக் கொடுமைகளுக்கு ஆளானதோடு புறக் கணிப்புக்கும் உள்ளாகி வந்தனர். மிக நீண்டகாலமாகத் தமிழர் சமூகத்தில் புரை யோடிக் கிடந்த சாதிய அடக்குமுறைக்கு எதிரான குரல்கள் இருபதாம் நூற்றாண்டின் ஆரம்பத்தில் இருந்தே இலக்கியங்களில் வெளிப்படத் தொடங்கினாலும் ஐம்பதுகளின் பின்னர் இடதுசாரிக் கருத்துக்கள் மக்கள் மத்தியில் பரவத் தொடங்கியபோது தான் அதனைத் தீவிரமாக எதிர்க்கும் மனோபாவம் உருவாகியது. பசுபதி இடதுசாரிக் கருத்துக்களை ஏற்றுக்கொண்டு செயற்பட்டவர் என்பதற்கு அப்பால் மேற்படி கொடுமைகளை நேடியாக அனுபவித்து வந்தவர் என்ற வகையில் சாதிக்கொடுமையினை உணர்ச்சி பூர்வமாகக் கவிதைகளில் வெளிப்படுத்துகின்றார்.

*ஆயிரமாம் சாதிகளை ஆக்கஞ் செய்து*
*அவன் தீது இவனடிமை தீண்டாச் சாதி*
*ஆயிரமாய் வாழ்வதிலே பெருமை கண்டார்!*
*அவர் மானம் போகையிலே தாழ்வோ சாதி*
*(புதுஉலகம், தாழ்வோ சாதி? : 60)*

வர்க்கவேறுபாட்டின் மற்றோர் வடிவமாகவே சாதிக்கொடுமையை பசுபதி நோக்கு கின்றார். சமூக முன்னேற்றம், நல்லிணக்கப்பாடு, நிறைவான வாழ்வு என்பவற்றுக்குச் சாதியம் தடையாக இருப்பதை அவர் கவிதைகளில் எடுத்துக்காட்டுகின்றார். நாகரிக வளர்ச்சி, சமூக முன்னேற்றம், கல்விப் பரம்பல், நவீன சிந்தனைகளின் எழுச்சி என்பன

ஏற்பட்டுவரும் சூழலில் தமிழர் சமூகம் சாதியத்தால் கூறுபட்டு கிடக்கும் பிற்போக்குத் தனத்தினை அவர் சுட்டிக்காட்டுகின்றார் சாடுகின்றார். சாதிக்கொடுமை அகன்ற சமத்துவமான உலகு பற்றிய எதிர்பார்ப்பினை அவர் கவிதைகள் வெளிப்படுத்து கின்றன. வர்க்க வேறுபாடகன்ற சமுதாயத்திற்காகப் பொதுவுடைமைச் சிந்தனைகளின் பின்னணியில் எழுச்சி கொள்ளும் போது சாதிக் கொடுமைகளும் இல்லாது ஒழிந்து விடும் என்ற நம்பிக்கையை அவர் கவிதைகள் விதைக்கின்றன.

*சாரும் பொதுவுடைமை சாதிமுறை ஒழியும்!*
*பேசும் மொழிச்சண்டை பேரற்றுப் போய்விடுமே!*
*கூசம் குறைசேர கொள்கை நிலைத்துவிடும்!*
*(புதுஉலகம், மூடிமறைக்காதீர்:65)*

**தேசமுன்னேற்றம்**

சமூகவிடுதலையை நோக்கிய பயணத்தில் தேசமுன்னேற்றம் குறித்தும் பசுபதி சிந்தித்துள்ளார் தேசமுன்னேற்றத்திற்குத் தேசிய உணர்வு, கல்வி வளர்ச்சி, மொழிப்பற்று, பண்பாட்டுப் பெருமிதம் என்பன அமைய வேண்டும் என அவர் வலியுறுத்துவதைக்காணலாம். நாம் இலங்கையர் என்ற எண்ணத்தோடு வேறுபாடுகள் மறந்து இணைவது நாட்டினதும் சமூகத்தினதும் முன்னேற்றத்திற்கு அடிப்படை என்பதை அவர் 'நாடும் ஏடும்' (புதுஉலகம்:27-28) என்ற கவிதையில் சுட்டிக்காட்டுகின்றார். அதேபோல ஈழத்து இலக்கியங்கள் தேசிய உணர்வுடன் எழுதப்பட வேண்டும் என்றும் அவர் வலியுறுத்துகின்றார். "தேசத்தின் பண்புதனைத் தெரியக்காட்டும் / தரமுள்ள இலக்கியங்கள் தாரும்..." என எழுத்தாளர்களைப் பார்த்துக் கேட்கின்றார். குறிப்பாகத் தமிழ்நாட்டுடன் இனங்காட்டிக்கொண்டு தமிழகத்திற்கும் ஈழத்திற்கும் பொதுவான பிரச்சினைகளைப் பொதுவான மொழியிலும் நடையிலும் எழுதும் எழுத்தாளர்கள் மீதான கோபத்தினை அவர் கவிதைகள் சுமந்துள்ளன. அவ்வாறு எழுதுவோர் 'நாசத்தின் படுகுழியை நாடிச்செல்வோர்' என்றும் 'நாடுநலம் ஏடுநலம் நாட்டமில்லார்' எனவும் அவர் சாடுகின்றார். அதேபோல 'ஏட்டுச் சுரைக்காய்?' (புதுஉலகம்:29-30) என்ற கவிதையில் சமூக முன்னேற்றத்திற்கு அவசியமான கல்வி குறித்து அவர் கருத்துக்களை முன்வைக்கின்றார். நடைமுறை வாழ்க்கைக்குப் பயன்தரவல்லதாகக் கல்வி அமைவதன் முக்கியத்துவம் குறித்து இக்கவிதையில் வலியுறுத்துகின்றார். சமூகக் குறைபாடுகளைக் கண்டுணர்ந்து தீர்ப்பதற்கு ஏற்ற திறனை வழங்குவதாக கல்வி அமைய வேண்டும் எனக் குறிப்பிடுகின்றார். பழைய இலக்கியங்களைக் கற்பிக்கும் போதும் அதனைச் சமூகத்தேவையறிந்து இற்றைப்படுத்திக் கற்பிக்கும் போது அது பெரும் பயனைத் தரும் என அவர் மறைமுகமாகக் கவிதையில் வெளிப்படுத்துகின்றார். தனது கவிதைகள் பலவற்றில் மொழிப்பற்று, பண்பாட்டுச்செழுமை பற்றிய பெருமிதம் என்பவற்றையும் பசுபதி வெளிப்படுத்தத் தவறவில்லை. சமூக வளர்ச்சியில் இவையும்

அவசியம் என்பதை அவர் எடுத்துக்காட்டுகின்றார். குறிப்பாகப் 'புது உலகம்' (புதுஉலகம்:22-26) என்ற தலைப்பிலான அவரது நீண்ட கவிதையில் இது தொடர்பான கருத்துக்களை அவர் பதிவு செய்துள்ளதைக் காணமுடியும். கவிஞர் தான் எதிர்பார்க்கும் புது உலகத்தில் கலைவளர்ச்சி, மொழிவளர்ச்சி, பண்பாட்டு வளர்ச்சி என்பன இருக்க வேண்டும் என்று எதிர்பார்க்கின்றார். சோசலிசப் புரட்சி, சமூகமாற்றம் என்பவற்றோடு இவையும் கைகோர்க்கும் போதே தாழ்வகன்ற வையகம் பிறக்கும் என அவர் குறிப்பிடுகின்றார்.

*"நுண்கலைகள் பெருகுதற்கு வழிபலவே உண்டு!*
*தாய்தன்னை தம்மொழியை தன்னாட்டை மேவி*
*தலையாயத் தாம்காப்பர் தாழ்வகன்ற வையம்"* (புதுஉலகம், புதுஉலகம்: 23)

முடிவுரை

கவிஞர் பசுபதி இடதுசாரி இயக்கங்களுடனும் அவற்றின் கொள்கைகளுடனும் இணைந்து செயற்பட்டவர் என்றவகையில் அவரது கவிதைகளில் மானுடவிடுதலை பற்றிய கருத்துக்கள் அதிகம் நிறைந்திருப்பதைக் காணமுடிகின்றது. குறிப்பாகத் தொழிலாளர், ஒடுக்கப்பட்டோர், சாதிய அடக்குமுறைக்குள்ளானோர் பற்றியும் அவர்களது சமூகவிடுதலை பற்றியதுமான கருத்துக்களை கவிதைகளில் அதிகம் பதிவுசெய்துள்ளார். ஒடுக்குமுறைக்குள்ளாவோரின் துன்பியல் வாழ்க்கையை எடுத்துக்காட்டும் கவிஞர் அவர்கள் சமூகவிடுதலையைப் பெற்று சமத்துவத்தினைப் பெற்றுக்கொள்ள சோசலிசப் புரட்சியொன்றே வழி என்பதை வலியுறுத்துகின்றார். அதற்காக இடதுசாரி இயக்கத்தோடு கைகோர்த்துச் செயற்பட வருமாறு அறைகூவல் விடுகின்றார். தானே முன்மாதிரியாகச் செயற்பட்டும் காட்டுகின்றார். இதனால் இவர் கவிதைகள் உணர்சிச் செறிவு மிக்கனவாக அமைகின்றன. பிரசார நெடியும் கோஷமும் அவற்றில் இயல்பாகவே அமைந்து விடுகின்றன. அதற்காக அவர் கவிதைகளைக் கலைத்துவக் குறைபாடுடையன என ஒதுக்கிவிட முடியாது. இருபதாம் நூற்றாண்டுக் கவிஞர்களுக்கு முன்மாதிரியாக சமூகவிடுதலையைக் கவிதைகளில் கையாண்ட பாரதியின் வழியினைப் பசுபதி பின்பற்றுகின்றார். 'தனிமனிதனுக்கு உணவில்லை எனில் ஜகத்தினை அழித்திடுவோம்' என்ற பாரதியின் கருத்துநிலையிலும் தமிழுணர்வு பற்றிய பாரதிதாசனின் சிந்தனைகளிலும் ஆழ்ந்த ஈடுபாடு அவருக்கிருந்தது. அவர்களைப் பின்பற்றி யாப்புப் பிசகாத ஆனால் யாப்புக்குள் புதிய கருத்துக்களைப் பேசும் கவிதைகளைப் பசுபதி எழுதுகின்றார். தமிழறிஞர் கந்த முருகேசனாரிடம் கற்றுத் தேர்ந்த யாப்பு அவருக்கு மரபுக்கவிதைகளைத் தவறின்றி எழுதும் திறனைக் கொடுத்திருக்கின்றது. மரபுக் கவிதையின் வேறுபட்ட வடிவங்களை அவர் கையாளுகின்றார். யாப்புச் சிதையாது எதுகை மோனை ஓசைநயங்களோடு எளிய தமிழில் அவை அமைந்துள்ளன. மஹாகவி உருத்திரமூர்த்தியின் கவிதைச் சாயலும்

இவர் கவிதைகளில் பளிச்சிடுகின்றது. இடையீடற்ற, ஆற்றொழுக்கான, சந்த நிறைந்த அவர் கவிதைகள் மானுடவிடுதலை பற்றிய கருத்துக்களைக் கவிஞரி அறிவு, அனுபவம், பார்வை, விசாலம் என்பவற்றிற்கு அமைவாக வாசகர் மனதி ஆழமாக பதிய வைக்க முயல்கின்றன.

**உசாத்துணைகள்**

இளங்கீரன், சுபைர் (1984), ஈழத்து முற்போக்கு இலக்கியமும் இயக்கமும், எழுத்தாள கூட்டுறவுப் பதிப்பகம், கொழும்பு.

சிவத்தம்பி, கா, (1978), இலக்கியத்தில் முற்போக்குவாதம், பாட்டாளிகள் வெளியீ சென்னை

சிவத்தம்பி, கா, (2010), இலங்கை முற்போக்கு எழுத்தாளர் சங்கமும் ஈழத்தின் இலக்கி வளர்ச்சியும்: ஒரு வரலாற்று நோக்கு, 1954 -1970, ஈழத்தில் தமிழ் இலக்கியம், (மூன்றா பதிப்பு), குமரன் பதிப்பகம், கொழும்பு

பசுபதி, க, (2000) புதுஉலகம் (இரண்டாம் பதிப்பு), தேசிய கலை இலக்கியப் பேரவை யாழ்ப்பாணம்.

மௌனகுரு, சி., சித்திரலேகா, மௌ, நுஃமான், எம், ஏ., (1979) இருபதாம் நூற்றாண் ஈழத்துத் தமிழ் இலக்கியம், வாசகர் சங்க வெளியீடு, கல்முனை.